# SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD
# ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
# இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
## வர்த்தக அமைச்சு

# ICT துறையில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு புத்தாக்க தயாரிப்பு/ தீர்வு மேம்பாட்டுக்காக உள்ளூர் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முற்சி (SMES)/ தொழில்நுட்ப தொடக்கங்களுக்கான நிதி உதவி

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை, 2022 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் கீழ் ICT துறையில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு புத்தாக்க தயாரிப்புகள்/ தீர்வு மேம்பாட்டுக்காக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி (SMES)/ தொழில்நுட்ப தொடக்கங்களுக்கான நிதி உதவி திட்டம் ஒன்றை செயற்படுத்தவுள்ளது. இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவி தேசிய விஞ்ஞான மன்றத்தினால் (NSF) வழங்கப்படும்.

**யாருக்காக**

புத்தாக்க தயாரிப்புகள்/ தீர்வுகளுடன் ICT SMEs/ தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்கள்

**உதவிக்கான பகுதிகள்:**

- ICT துறையில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கு புத்தாக்க தயாரிப்பு/ தீர்வு மேம்பாட்டுக்காக SMEs/ தொழில்நுட்ப தொடக்கங்களை பலப்படுத்தல் மற்றும் உதவுதல்.
- அவதானம் செலுத்தப்படும் தொழில்நுட்ப பிரிவுகளில் IP உரிமம், PCT application பெறுவதற்கு நிறுவனங்களுக்கு உதவுதல் (IoT, AI, VR/AR)
- வெளிநாட்டு சந்தையில் இலங்கையின் உள்நாட்டு ICT வர்த்தகக் குறியை நிறுவுதல்
- உலகளாவிய மதிப்பு சங்கிலிகளுடன் இணைப்புகளை நிறுவுதல்

**தகைமை அளவுகோல்:**

- SME அல்லது தொடங்குனராக இருத்தல் வேண்டும். (இணையதளத்தில் வரையறைகளை பார்க்கவும்)
- ICT தயாரிப்புகள் அல்லது ICT மென்பொருள் பயன்பாட்டின் அனைத்து SMEs/ தொடங்குனர்களும் 100% உள்ளூர் உரிமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சந்தைக்கு தயாரான தயாரிப்பு/ சேவையை மேம்படுத்தி இருத்தல் வேண்டும்.
- ICT தயாரிப்பு/ மென்பொருள் தீர்வு மேம்பாட்டு துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (ஆவண அத்தாட்சி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)
- இதனை ஒத்த திட்டங்களுக்காக கடந்த 3 ஆண்டுகளுக்குள் எந்த ஒரு அரச நிதி உதவியையும் பெறாத எந்த ஒரு நிறுவனமும்.

**தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான EDB இன் உதவி**

செலவினப் பகிர்வு அடிப்படையில் செயற்படுத்தப்படும் இந்த உதவித் திட்டத்தில், மீள் நிரப்பல் அடிப்படையில் நிறுவனம் ஒன்றுக்கு அதிகபட்சம் 4.0 மில். ரூபா வரையான திட்ட செலவின் 70% இனை EDB ஏற்கும்.

திட்ட வழிகாட்டல்கள் மற்றும் விண்ணப்பப்படிவத்தை www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும்.

**விண்ணப்பம் மற்றும் தேர்வு**

2022 மார்ச் 04 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் www.srilankabusiness.com என்ற EDB இணையதளத்தில் "அறிவித்தல்கள்" தலைப்பின் கீழ் கிடைக்கப்பெறும் "ஆர்வ வெளிப்பாட்டு" படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுடைய நிறுவனங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிக்கின்ற நிறுவனங்களுக்கு இந்த உதவித் திட்டத்தின் சுருக்கமான விபரங்களுக்கு ஒன்லைன் நிகழ்ச்சி ஒன்று (Webinar) ஏற்பாடு செய்யப்படும். வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டவாறு அனைத்து தொடர்புடைய ஆவணங்களுடன் முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2022 மார்ச் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு மின்னஞ்சல்: ravindi@edb.gov.lk, உதவிப் பணிப்பாளர் - ரவிந்தி ரணராஜா மற்றும் மின்னஞ்சல்: dinesh@edb.gov.lk, 0112303862 அல்லது 011-2300705 (233) என்ற தொலைபேசி வழியாக ஏற்றுமதி ஊக்குவிப்பு அதிகாரி – திரு தினேஷ் அத்தநாயக்க ஆகியோரை தொடர்புகொள்ளவும்.

**தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்றுனர்**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை**

**இல. 42, EDB/ NDB கோபுரம், நவம் மாவத்தை, கொழும்பு 02.**

**இணையதளம்: www.srilankabusiness.com**